**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இராதாபுரம்**

அரசு தரப்பு 1 வது சாட்சி ( அ.சா. 1 )

<u>ஆண்டு பட்டிகை வழக்கு எண். 1493/2020</u>

STATEMENT OF WITNESS

| | | |
|---|---|---|
| பெயர் | - | நாகமணி |
| தந்தை/கணவர் பெயர் | - | சுப்பையா |
| வயது | - | |
| ஊர் | - | |
| மதம் | - | |

**<u>முதல் விசாரணை</u>** Date: 16/ 02 /2021

நான் தற்போது குறிஞ்சி குளத்தில் வசித்து வருகிறேன். ஓட்டுனராக வேலை பார்க்கிறேன். ஆஜர் எதிரி எனது உடன் பிறந்த சகோதரர் ஆவார். தற்போது எதிரியும் நானும் சமரசம் ஆகி விட்டோம். வழக்கினை மேல்நடத்த விரும்பவில்லை. காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ. 1. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கோரி அனுமதி கேட்டு அனுமதி அளிக்கப்பட்டது.

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் போலீசார் விசாரணையில் கடந்த 02/11/19 அன்று இரவு 8 மணிக்கு எங்கள் வீட்டின் நாயை எதிரி வீட்டின் நாய் கடித்து குதறியதாகவும், அதை பார்த்த எனது மனைவி குடத்தை வீசி நாயை விரட்டி விட்டதாகவும், இதை பார்த்து கொண்டிருந்த எதிரி அரிவாளுடன் வந்து எனது மனைவியை அசிங்கமாக பேசியதாகவும், தலைமுடியை பிடித்து அடித்ததாகவும், எனது மனைவியை வெட்ட முயற்சித்த போது நான் தடுத்ததாகவும் இதனால் அந்த வெட்டு எனது இடது முழங்கையில் பட்டதாகவும், சம்பவத்தினை பார்த்த மாமியார் மரியம்மாளும், சோபியாவும் சத்தம் போட்டவுடன் எதிரி என்னை கொல்லாமல் விட மாட்டேன் என மிரட்டி சென்றதாகவும், காயம்பட்ட என்னை கூடன்குளம் கஸ்தூரி மருத்துவமனைக்கு சிகிட்சைக்காக அனுமதித்ததாகவும், அங்கிருந்து மேல் சிகிட்சைக்காக நாகர்கோவில் ஸ்ரீ ராம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், அங்கு வந்து விசாரித்த போலீசாரிடம் புகார்

வாக்குமூலம் கொடுத்து விட்டு தற்போது எதிரியுடன் சமரசம் ஆகிவிட்டு உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** - இல்லை